## 8.12 பணியிடைக்காலத்தில் காலஞ்சென்ற ஊராட்சி ஒன்றிய பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு அளித்தல்

ஊரக வளர்ச்சித் துறை

அரசாணை (நிலை) எண் 11 நாள் : 12.1.1993

படிக்க :

1. அரசாணை (நிலை) எண் 763, ஊரக வளர்ச்சித்துறை நாள் 29.6.86
2. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முகக் கடிதம் எண் 2359/89/கே5, நாள் 27.1.90
3. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் எண் 40767/90/6ஆ, நாள் 29.3.90
4. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், கடிதம் எண் 2247/இ4/91, நாள் 19.6.92
5. ஊரக வளர்ச்சி இயக்குநரின் நேர்முகக் கடிதம் எண் 50207/92/6ஆ, நாள் 5.6.92

**ஆணை**

பார்வை 1ல் காணும் அரசு ஆணையில் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசுப் பணிக்கு கொண்டுவரப்பட்ட நாளான 1.6.81க்கு முன் பணியிலிருக்கும்போது இறந்த ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் வாரிசுதாரர்களுக்கும், இதே போன்று ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களை அரசுப் பணிக்கு கொண்டு வரப்பட்ட நாளான 1.4.74க்கு முன் பணியிலிருக்கும்போது இறந்த ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களான காசாளர், இளநிலைஉதவியாளர், தட்டச்சர், தலைமை எழுத்தர் போன்றவர்களின் வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையில் ஊராட்சி ஒன்றிய பணியிடங்களில் தான் வேலைவாய்ப்பு அளிக்க இயலும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

2. 1.4.74 முதல் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களான காசாளர், இளநிலைஉதவியாளர், தட்டச்சர், தலைமை எழுத்தர் போன்ற பணியிடங்கள் அரசுப் பணியிடங்களாக ஆக்கப்பட்டன. 1.6.81 முதல் ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் அரசுப் பணியாளர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். எனவே, தற்போது ஊராட்சி ஒன்றியப் பணியிடங்களான பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் மற்றும் காவலர் பணியிடங்கள் மிகமிக குறைவாக உள்ளதால் குறைந்த அளவு கல்வித் தகுதி, அதற்கு மேலும் கல்வித்தகுதி பெற்ற காலஞ்சென்ற ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு அவரவரது கல்வித்தகுதிக்கு ஏற்றவாறு ஊராட்சி ஒன்றியப் பணியிடங்களில் பணியமர்த்த இயலவில்லை. அவர்கள் பணி வாய்ப்பு ஏதுமின்றி காத்திருப்போர்பட்டியலில் பல ஆண்டுகளாக காத்திருக்கின்றனர். மேலும், அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு, அரசுப் பணியிடங்களான இளநிலை உதவியாளர், காசாளர், தட்டச்சர் போன்ற பணியிடங்களில் கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்படுவது போன்று, போதுமான கல்வித்தகுதி பெற்ற ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழுவின் எல்லைக்குட்பட்ட பணியிடங்களில் தேர்வாணைக்குழுவின் இசைவினை பெற்று நியமனம் செய்ய மனிதாபிமான அடிப்படையில் பரிசீலனை செய்து ஆணை வழங்கும்படி தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர்ஆகியோர் கருத்துரு அனுப்பியுள்ளனர். மேலும், அரசு ஆணை (நிலை) எண் 763, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 29.6.86–ன்படி பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் மற்றும் காவலராக பணி நியமனம் வழங்கப்பட்ட கல்வித் தகுதி வாய்ந்த வாரிசுதாரர்கள் தாங்கள் நியமனம் செய்யப்படும்போதே அரசுப் பணியிடங்களான இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடங்களில் அமர்த்த போதிய தகுதி பெற்றவர்களாக இருந்ததினால் தங்களுக்கு முன்னுரிமை அளித்து, இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடங்களில் முதலில் பணியில் அமர்த்த வேண்டும் என அரசுக்கு விண்ணப்பித்துள்ளனர். மேற் கூறிய கருத்துருக்களை ஊரக வளர்ச்சி இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார்.

3. இது குறித்து தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்பட்டது. பார்வை–4ல் காணும் கடிதத்தில், பணியிடை இறந்த ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் வாரிசுதாரர்களில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட இளநிலை உதவியாளர், தட்டச்சர் பணியிடங்களுக்கு தகுதி பெற்றவர்களை தேர்வாணையத்தின் இசைவினைப்பெற்று அவரவர் பணியினை, ஆணை வெளியிடப்படும் நாள் முதல் வரன்முறைப்படுத்தலாம் என தேர்வாணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

4. மேற்கூறியவற்றால் இக்கருத்துருவினை அரசு மிகக்கவனத்துடன் பரிசீலித்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:-

**8. MISCELLANEOUS**

1. 1.6.81க்கு முன் பணியிடை இறந்த ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களின் வாரிசுதாரர்களுக்கும்;

2. 1.4.74க்கு முன் பணியிடை இறந்த தலைமை எழுத்தர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் காசாளர் போன்ற ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கும்; மற்றும்

3. பணியிடை இறந்த ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களான பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக் காவலர் ஆகியோரின் வாரிசுதாரர்களுக்கும்;

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடங்களில், தேர்வாணையத்தின் இசைவினை பெற்று அவரவர் பணியினை ஆணை வெளியிடப்படும் நாள் முதல் வரன்முறைப்படுத்த வேண்டும். மேலும் அரசு ஆணை (நிலை) எண் 763, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 29.6.86ன்படி பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக் காவலராக நியமனம் செய்யப்பட்ட பணியிடை இறந்த ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் வாரிசுகளில் பணி நியமனம் செய்யப்படும்போதே இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பதவிகளுக்குரிய தகுதி பெற்றிருந்தவர்களுக்கு, தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெற்று இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணி நியமனத்திற்கு முன்னுரிமை அளிக்கவும் ஆணையிடப்படுகிறது.

5. இவ்வாணை பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறையின் அ.சா.கு.எண் 102264/Per-D/92–1, நாள் 8.1.93–ன்படி ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**வே. மாதவன் நாயர்**
அரசு செயலாளர்